# சங்க இலக்கியத்தில் மருத்துவ குறிப்புகள்

**பேரா.சி.பாக்கிய செல்வ ரதி**
**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,**
**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி.**
**backyaselvarathi_ta2@mail.sjctni.edu**

**30**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர். பிற உயிரினங்களையும் தம் உயிராகவே கருதினர். உணவே மருந்து என்பதை உணர்ந்து அரிய தானிய உணவுகளையும், அசைவ உணவுகளையும் உண்டனர். நோயைத் தவிர்க்கும் சில வழிமுறைகளையும் கையாண்டனர். நோயைக்கட்ட வாயைக் கட்டு என்கிறது பழமொழி. நோய் ஏற்பட்டபின் பல மருத்துவ முறைகளைக் கையாண்டதைச் சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. பொதுவாக போர் காலத்தில் விழுப்புண் ஏற்பட்டது. ஐயவி, வேம்பு போன்றவற்றைப் பயன்படுத்திக் குணப்படுத்தியிருக்கின்றனர். இன்றைய காலத்தில் உள்ள அறுவை சிகிச்சை முறை அன்றைய காலத்தில் இருந்ததையும் சங்க இலக்கியம் கூறுகிறது. சங்க இலக்கியம் வாயிலாக தமிழரின் மருத்துவ அறிவியல் சிந்தனையை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொல்:** அறவோன், ஐயவி, வேம்பு, பஞ்சு, நூல், தொற்று நோய், விழுப்புண்

**முன்னுரை**

உலகம் பரந்துபட்டது, பல்வேறு வகையான உயிரினங்களை உள்ளடக்கியது. ஒரு செல் உயிரினமான அமீபாவிலிருந்து உலகின் பெரிய உயிரினமான நீலத் திமிங்கலம் வரை தன்னுள் கொண்டது. உயிர்கள் தொடர்ச்சியாக பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக் கொண்டு உருவாகி வாழ்ந்து வருகின்றன. எல்லா உயிர்களும் உலகில் தோன்றுவது போல், மறைவதும் அல்லது அழிந்து போவதும் இயற்கையானது. உயிர்கள் அழிவதற்கு நோய்களும் காரணமாகின்றன. மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்களையும் அவற்றுக்கான மருத்துவ குறிப்புகளையும் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நோய் விளக்கம்**

உயிரினங்களின் உடலிலோ அல்லது உள்ளத்திலோ தோன்றுகின்ற சாதாரண நிலையைத் தாண்டிய அசாதாரண நிலையை நோய் என்று வரையறுக்கலாம். தன் இயல்பு நிலையிலிருந்து உயிர்கள் மாறுபட்டால் நோய் எனலாம். நோயினை ‘வியாதி’ என்றும் ‘பிணி’ எனறும் அழைப்பர். மனித வாழ்வின் நிலையான துன்பங்களில் நோய் முதன்மையானது. உடல், உள்ளம் நலிவுற்றால் மனிதன் சோம்பல் உறுகிறான். இயல்பாக அவனால் வாழ முடியாத நிலை ஏற்படுகின்றது. நோயினை நலமற்ற நிலை அல்லது சீரழிந்த நிலை என்று தமிழ் அகராதி கூறுகிறது.

நோய் இரண்டு காரணங்களால் ஏற்படுவதாக நாம் அறிந்து கொள்ளலாம். ஒன்று வெளிக்காரணிகள் ஏதாவது தொற்றுக் கிருமிகளால் வெளியிலிருந்து பரவுவதால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. இரண்டாவது உடலின் செயற்பிறழ்வுகளால் ஏற்படும் நோய்கள் உள்ளகக் காரணிகளால் தோன்றும் தன்னெதிர்பு நோய்கள் என இரு வகைப்படும்.

உயிர்களுக்குப் பலியை உண்டாக்கும் நிலைகள், செயல் பிறழ்வுகள் கடும் துன்பம் தரும். உள்ள காயங்கள், உடல் ஊனங்கள், நலச்சீர்கேடுகள், நோய் கூட்டறிக்குறிகள், நோய் தொற்றுகள், தனிப்பட்ட நோய் உணர்குறிகள், பொது நிலையிலிருந்து விலகிய நடத்தைகள், மனித வடிவம் மற்றும் செயல்களில் உள்ள அசாதாரண வேறுபாடுகள், அனைத்தையும் நோய் என்று குறிப்பிடலாம்.

நோய்களை 4 வகையாக பாகுபடுத்துகின்றனர்.

1. நோயே நோய் விளைவிக்கின்றது.
2. குறைபாட்டு நோய்
3. பரம்பரை வியாதிகள்.
4. உடலியக்க பிறழ்வுகள். என பாகுபடுத்துகின்றனர்.

**சங்க இலக்கியங்களில் மருத்துவ குறிப்புகள்**

சங்க இலக்கியங்களை அக இலக்கியம், புற இலக்கியம் என்று இரண்டு வகையாக பாகுபடுத்துவர். அந்த வகையில் எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு பதிற்றுபத்து நூல்களில் நோய்களின் தன்மை அதற்கான மருந்துகள், மருந்துகளை கையாள்கின்ற முறை, கட்டுபோடுதல் போன்றவை எடுத்துக் காட்டப்படுகின்றன.

**மருத்துவர்**

சங்ககால மக்கள் மருத்துவம் செய்பவரைப் பல பெயரால் அழைத்தனர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது, மருத்துவரை அறவோன் என்று நற்றிணைக் கூறுகிறது,

”அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் ” (நற் : 136)

மேலும் அவர்கள் மருத்தன், மருத்துவன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது (கலி: 17: 20-21, 137: 24-25) (புறம்: 173: 11). அக்காலத்தில் போருக்குச் சென்று விழுப்புண்ணோடு திரும்பும் வீரனுக்கு மனைப் பெண்டிர் மருத்துவம் பார்த்துள்ளனர். மருத்துவம் பார்க்கும் ஆணை மருத்துவர் என்றும் பெண்ணை மருத்துவி என்றும் அழைத்தனர்.

**புண் பற்றிய செய்தி**

உடலில் ஏற்படும் காயத்தைக் குறிக்க புண், வழலை, மிடற்றுப் பசும்புண் போன்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகின்றன. அரிசில் கிழார் தனது புறநானூற்றுப் பாடலில் தலைவனுக்குப் போர்களத்தில் ஏற்பட்ட விழுப்புண் பற்றி பாடுகிறார். தலைவன் போருக்குச் சென்று வருகிறான். தன் மன்னனுக்காக, நாட்டுக்காக நிறைய விழுப்புண்களோடு வருகிறான்.

"நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலம் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறி கழல்கால் நெடுந்தகை புன்ஏ"(புறம். 281)

போருக்குச் சென்ற தலைவன் வெற்றி பெறுகிறான். தன் நாட்டை காக்கிறான். ஆனால் அவன் உடலில் பல காயங்கள் எதிர்நாட்டு வீரர்களால் ஏற்பட்டு இருக்கின்றன. அந்தப் புண்ணை ஆறச் செய்ய தலைவி எண்ணுகிறாள். தன் தோழியிடம் தலைவி பேசுகிறாள். தலைவனுக்கு ஏற்பட்டுள்ள புண்ணை ஆற்றுவது நம் கடமை. விழுப்புண் மன்னனுக்காக தாங்கி வந்திருக்கிறான். புண்ணுக்கு மருந்திட்டு நோய் ஆற்றுவது கடமை என்று தோழிக்குத் தலைவி உணர்த்துவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலின் வாயிலாக புண்ணுக்கு மருந்திடும் வழக்கம் இருந்ததை அரிசில்கிழார் வெளிப்படுத்துகிறார்.

**புண்ணுக்கு மருந்திடும் முறை**

போர்க்களத்தில் வீரர்களுக்கு காயம் ஏற்படுதல் இயல்பானது. அக்காயத்தை ஆற்றுவதற்கு சில மருத்துவ குறிப்புகளையும் புறநானூறு எடுத்துரைக்கிறது. நோய்வாய்ப்பட்டவருடைய இல்லமானது தூய்மையாக இருக்கவேண்டும். தூய்மையே நோயைப் பாதியளவு குறைத்துவிடும். நோய் ஏற்பட்டவருடைய வீட்டு மனையில் இரவ மரத்தின் தழைகளுடன் வேப்ப மரத்தின் இலைகளையும் செருகி வைத்தால் நோய்க் கிருமிகள் வீட்டிற்குள் வராது என்ற உண்மையை அரிசில் கிழார் பாடல் எடுத்துரைக்கிறது. காயம்பட்ட இடத்தில் வெண்சிறு கடுகை அரைத்து மருந்தாக தடவினர். இதனை,

"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்இயல் கறங்கக்
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி" (புறம்: 281)

என்ற வரிகள் காயத்திற்கு மருந்திட்டமையை நன்கு உணர்த்துகின்றன.

**பஞ்சு கொண்டு கட்டுப் போடுதல்**

காவிரிப்பூம்பட்டிணத்து காரிக் கண்ணனார் பஞ்சு கொண்டு கட்டுப் போடுகின்ற மருத்துவ முறையினைத் தனது பாடலின் வாயிலாக கூறுகிறார்.

"செருவாய் உழக்கி குருதி ஓட்டிக்
கதுவாய் போகிய துதிவாய் எஃகமுமாடு
பஞ்சியும் களையாப் புண்ணர்
அஞ்சுதகவு உடையவர்இவன் தன்னை மாரே"(புறம்: 353)

இந்தப் பாடலில் தலைவன் தன்னுடைய தொன்மையான குடியைக் காப்பாற்ற போருக்குச் செல்கின்றான். போர்க்களத்திலே எதிரி வீரர்களைத் துவம்சம் செய்கிறான். போரிலே வாகை சூடுகிறான். அரன் கூரிய அம்பு, ஈட்டி போன்ற ஆயுதங்களால் ஏற்பட்ட காயங்கள் உள்ளன. அந்தக்

காயங்களுக்கு மருந்திட்டு பஞ்சால் ஆன துணிகளால் கட்டு போட்டுகிறான். பஞ்சு மென்மையானது புண்ணை ஆற்றுவதற்கு தேவையான காற்று உள் சென்று ஆற வைக்கும் என்ற மருத்துவ முறையை இப்பாடலில் புலனாகிறது. கட்டு போட்டு புண்ணை ஆற வைக்கும் முறை சங்க காலத்திலே இருந்துள்ளது என்பதை இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

**உணவே மருந்து என உணர்த்துதல்**

நாம் உண்ணும் உணவு அனைத்தும் மருத்துவ குணம் கொண்டவை. எந்த உணவு எதற்கு பயன்படும் என்றும் அறிந்திருந்தனர். எனவே நீண்ட வாழ்வைத் தரும் நெல்லியின் மகத்துவத்தை உணர்ந்திருந்தனர். நெல்லியில் அதிகமான வைட்டமின்கள் உள்ளன. எனவே இரத்த விருத்தியாகவும் கருமையான நீண்ட கூந்தல் வளர்ச்சி மருந்தாகவும், ஆயுள்காலத்தை நீட்டிக்கச் செய்யும் அருமருந்தாகவும் செயல்படக்கூடியது. எனவே அதியமான் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுக்கிறார். இதனை புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

அதியமான் மன்னனாக அவையிலே வீற்றிருக்கிறான். அவைக்கு ஔவையார் வருகிறார். மன்னன் எல்லா நிலைகளிலும் மேன்மையானவன், உயர்ந்தவன், வெற்றியை மட்டுமே ருசிப்பவன். அவனுக்கு அரிய நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அந்தக் கனி உண்பவரைப் பல்லாண்டு காலம் ஆயுளை நீட்டிக்கும். ஆனால் அந்தக் கனியினை அவன் உண்ணாமல் ஔவைக்குக் கொடுக்கிறான். ஔவை பெருமிதம் அடைகிறார், அவனை வானளாவ புகழ்கிறார். நெல்லிக்கனியானது ஆயுளை நீட்டிக்கும் என்பதனை,

“நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு நீதனையே” (புறம்: 91)

என்ற பாடல் உணவே மருந்து என்ற கருத்தை உணர்த்துகின்றது.

**நூல் கொண்டு தைத்து புண் ஆற்றும் முறை**

பதிற்றுபத்து ஐந்தாம் பத்தின் இரண்டாவது பாடல் நூல் கொண்டு தையலிடும் முறை சங்க காலத்தில் உள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. போருக்கு வீரர்கள் செல்கின்றனர். போருக்குச் சென்ற வீரர்கள் உடலில் பல்வேறு இடங்களில் காயம் ஏற்படுகின்றன. ஆழமான வெட்டுக் காயங்கள் விரைவில் ஆறாது, அதனால் அந்த வெட்டுக் காயத்தை நூல் கொண்டு சேர்த்து தைத்தால் அந்தக் காயம் சீக்கிரம் சீழ் பிடிக்காமல் ஆறிவிடும். அந்த உண்மையை,

இடும்பனம் புடையல் ஈகை வான்சுழல்
மீன்தேர் கொட்பின் பணிக்களம் மூழ்கி
சில் பெயந்தன்ன நெடுவென் ளூசி
நெடுவசி பரந்த விடுவாழ் மார்பின்
அம்பு சேர் உம்பினோர் சேர்ந்தோர்” (பதி: 5ஆம் பத்து: 2)

போரிலே கூரிய ஆயுதங்களால் ஏற்படுகின்ற காயங்களை வெண்மையான ஊசியிலே நூலினைக் கோர்த்து தைக்கின்ற நிலை இருந்துள்ளது. இன்றைய நவீனகால அறுவை சிகிச்சைகளுக்கு முன்னோடிகளாக தமிழர்கள் இருந்தது புலனாகிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழர்கள் உணவே மருந்தாக, மருந்தே உணவாகக் கொண்டு வாழ்ந்தனர். இன்றைய நவீன காலத்திலுள்ள அறுவை சிகிச்சை முறையையும் அறிந்திருந்தனர் என்பதை பதிற்றுப்பத்து நன்கு உணர்த்துகிறது. காயம்பட்ட இடத்தில் மருந்தை மட்டும் இடாமல், பஞ்சை வைத்து காயத்திற்குக் கட்டு போடும் முறையையும் அறிந்திருந்தமையை நன்கு அறிய முடிகிறது. மேலும் வீட்டை சுற்றியும் மூலிகைகளை வைத்திருந்தமையும் சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. இதன் மூலம் பண்டைய தமிழர்களின் அறிவாற்றலை நன்கு அறியலாம்.

**துணை செய்த நூல்கள்**

1. இராசமாணிக்கனார்.மா,கலித்தொகை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2011.
2. ஔவை துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2020.
3. கௌமாரீஸ்வரி.எஸ், கௌரா தமிழ் அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
4. புலியூர்க்கேசிகன் (உ.ஆ),பதிற்றுப்பத்து, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2010.
5. மாணிக்கவாசகன்.ஞா (உ.ஆ), புறநானூறு மூலமும் - உரையும், உமா பதிப்பகம், சென்னை.
6. முத்துராமன்.ஆ , வாழ்வியல் சிந்தனைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.